## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(01.03.2023 முதல் 05.03.2023)

**அறிக்கைஎண்: 17/2023** **தேதி: 28.02.2023**

### கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 - 35 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 20 - 22 °செ ஆகவும் பதிவானது.

### கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (01.03.2023 முதல் 05.03.2023).

| கடந்தவாரவானிலை (24.02.2023 முதல் 27.02.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (01.03.2023 முதல் 05.03.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 24/02 | நாள்-2 25/02 | நாள்-3 26/02 | நாள்-4 27/02 | தேதி | நாள்-1 01/03 | நாள்-2 02/03 | நாள்-3 03/03 | நாள்-4 04/03 | நாள்-5 05/03 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 33 | 35 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 35 | 35 | 35 |
| 22 | 21 | 20 | 20 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 4 | 3 | 3 | 3 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 0 | 0 | 3 | 3 |
| 78-39 | 82-30 | 77-33 | 76-31 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-40 | 90-30 | 80-20 | 80-20 | 80-30 |
| 15 | 17 | 17 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 6 | 4 | 8 | 8 |
| கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு |

### கரூர் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டமின்றி தெளிவாக காணப்படும். 01.03.2023 முதல் 05.03.2023 வரை மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 34 – 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 – 24 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 - 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 20 - 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 – 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | அறுவடை | அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த நெல் வயல்களை மழைக்கு முன் அறுவடை செய்யவும் |
| எள் | விதைப்பு | மாசிப்பட்டத்தில் எள் விதைப்பதற்கு திண்டிவனம் 4, திண்டிவனம் 7 மற்றும் விருத்தாசலம் 1 ரகங்கள் ஏற்றவை. |
| நெல் தரிசு | உளுந்து | நெல் தரிசு பயறுவகைப் பயிர்களுக்கு பூக்கும் தருணத்திலும், அடுத்து 15 நாட்கள் இடைவெளியிலும் டிஏபி (2 சதம்) + முரியேட் ஆப் பொட்டாஷ் (1 சதம்) கரைசலை காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். டிஏபி கரைசலுக்கு பதிலாக "பயறு அதிசயம்" எக்டருக்கு 5.0 கிலோ என்ற அளவில் மொட்டு வைக்கும் தருணத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் |
| கரும்பு | வளர்ச்சி பருவம் | 5 மாத கரும்பில், காய்ந்த இலைகளை உரித்து மண்ணின் மேற்பரப்பில் போர்வை போல் பரப்பி மண் ஈரபதத்தை பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | உடல் வெப்பநிலையை பராமரிக்க புண்ணாக்குடன் 100 கிராம் வெல்லம் சேர்த்து குடிநீரில் தரவேண்டும். தாதுஉப்பு கலவை ஒரு பசு மாட்டிற்ககு 30 கிராம் வீதம் குடிநீரில் தர வேண்டும். |

## குறுஞ்செய்தி

அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த நெல் வயல்களை மழைக்கு முன் அறுவடை செய்யவும்

**இயக்குநர்**